முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S.No. 7/2022

தேதி : 01-08-2025

(வா.சா.1) – திரு.அசோகன்.

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1. வழக்கின் விபரங்கள் தெரியும் என்றால் சரிதான். நிரூபணவாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டேன் என்றால்சரிதான். பிராது மற்றும் நிரூபணவாக்குமூலத்தில் எந்த தேதி மாதத்தில் பிரதிவாதி என்னிடம் பணம் கேட்டார் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன். நான் சொல்வது தவறு என்றும், அப்படி சொல்லவில்லை என்றால் சரியல்ல. எங்குவைத்து புரோநோட் எழுதப்பட்டது என்று பிராது மற்றும் நிரூபணவாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது தவறு என்றும், அப்படி சொல்லவில்லை என்றால் சரியல்ல. புரோநோட் எழுதும்போது யாரெல்லாம் இருந்தார்கள் என்ற விபரத்தை பிராது மற்றும் நிரூபணவாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன். நான் சொல்வது தவறு என்றும், அப்படி சொல்லவில்லை என்றால் சரியல்ல.

2. புரோநோட் தொகையை எந்ததேதியில் பிரதிவாதியிடம் தேதியில் கேட்டேன் என்று குறிப்பிட்டு பிராது மற்றும் நிரூபணவாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன். நான் சொல்வது தவறு என்றும், அப்படி சொல்லவில்லை என்றால் சரியல்ல. காமாட்சி என்பவரை தெரியுமா என்றால் தெரியும். அவர் என்ன உறவுமுறை என்றால் சித்தப்பா. காமாட்சியிடம் பிரதிவாதி தொகை பெற்றுக்கொண்டு திருப்பி செலுத்தியவிபரம் தெரியுமா என்றால் தெரியாது.. மேற்படி காமாட்சி வட்டி தொழில் செய்து வருகிறார் என்றால் தெரியாது. பிரதிவாதியின் மீது காமாட்சி வழக்கு போட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியாது. புரோநோட் தொகையை எப்படி கொடுத்தேன் என்ற விபரத்தை பிராது மற்றும்

நிருபணவாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல, ரொக்கமாக கொடுத்தேன். எவ்வளவு ரூபாய் கொடுத்தேன் என்றால் ரூ.2 லட்சம். மேற்படி ரூ 2லட்சம் எனக்கு எப்படி கிடைத்தது என்று பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான், விவசாயத்தின் மூலம் கிடைத்தது. தாவா வழக்கில் தாவா கடனை தவிர வேறுகடனை பற்றிய விபரத்தினை பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை.

3. கடன் கொடுத்த விபரம் வேறு யாருக்கு தெரியும் என்றால் சாட்சிகளை தவிர வேறு யாருக்கும் தெரியாது. பிரதிவாதி என்னிடம் எப்போதும் கடன்வாங்கவில்லை என்றும், காமாட்சியிடம் பிரதிவாதி கொடுத்திருந்த நிரப்பப்படாத புரோநோட்டில் உள்ள கையெழுத்தை வைத்து நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. புரோநோட்டில் உள்ள விபரத்தை யார் பூர்த்தி செய்தார்கள் என்ற விபரத்தை பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன், பிரதிவாதி தான் எழுதி கொண்டுவந்தார். நான் வட்டி தொழில் செய்கிறேன் என்றால் சரியல்ல, விவசாயம் தான் செய்கிறேன். இந்த 2 வழக்கை வேறு யார் மீதும் புரோநோட் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

ஒம்.K.ரேணுகாதேவி,
முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.